OPEN ACCESS

Volume: 5

Issue: 2

Month: October

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.07.2020

Accepted: 18.08.2020

Published: 01.10.2020

Citation:
Janakiraman, N., & Dhanalakshmi, P. (2020). A Semantic Theories of Tholkappiyam and Aspects in Technical Terms. *Shanlax International Journal of Tamil Research, 5*(2), 46–54.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i2.3421

*Corresponding Author:
janakirambdu@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Semantic Theories of Tholkappiyam and Aspects in Technical Terms

**Dr. N. Janakiraman**
*Assistant Professor and Head , Department of Tamil, Bharathidasan University*
*Constituent College of Arts and Science, Navalurkuttapattu, Srirangam*
*Trichirappalli, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-7462-3858

**Dr. P. Dhanalakshmi**
*Assistant Professor of Tamil, Department of Tamil*
*Sri Sarada College for Women (Autonomous), Salem, Tamil Nadu, India*

**Abstract -** Tamil language Developed in somany ways of Technical field in this Present Scenario. Technical Terms History is long term to world. Tholkappiyam is a first grammar of Tamil Literary history. Is a first Traditional Grammar. This Grammar Mentioned lot of Departments of Language Development. Terminology field started in 19th and 20th Century. Its reached out of Computer and Internet Technology. Linguist formation of many of Theories and concept. Some Scholars he creating many terms and published public journals. Some terms is reached some words is outlet. Some terms is Standardize and stabilize. If Every Term is used to people friendly and acceptable. All terms injecting to one basic orgin. The fundamental of Tholkappiyam Grammar. In this research article deals with how to make a new term of Scientific field and law and other fields. The grammarian used to new concept and theories of Based on Tholkappiyam when a complete of Terminology field.

**Keywords:** Tholkappiyam, Linguistics, Technical Terms, Translation, Transliteration, Conceptualization, New Words, Technical Terms, Language Policy, Language Theories, Law of Economy, Adaptation.

**References**

1. Agasthiyalingam S, Dravidia mozhigal (1990), Annamalai University, Chithambaram.
2. Bloomfield (1993), Language, New York.
3. Ilangumaran, R, Ilakkana varalaru ( 2016), Manivasagar Publications, Chidambaram.
4. Janakiraman, N, Ariviyal Kalaochollakkam ( 2003), Ragavan Publishers, Cuddlaore.
5. Janakiraman N, Ariviyal Tamizh Varalaru (2005), Ragavan Publishers, Cuddlaore.
6. Karunakaran K, Mozhiyiyal (2000), Bharathiyar University, Coimbatore.
7. Radha chellappan, Kalaicholliyal (2006), Thamarai Publications, Chennai.
8. Radha Chellappan, Kalaichollakkam (1985), Mangai, Vathiayr Thottam, Chennai.
9. Radhamony, K, (1995),The Language of Chemistry, DLA Publications, Thiruvananthapuram.
10. Shanmugam, S.V, Chollilakkana Kotpaadu (1990), Annamalai Nagar, Chidambaram.
11. Shanmugam, S.V, Modernisation in Tamil, (1975), Indiana University, Bloomington.
12. Sundaram, R.M, Ariviyal Katturaigalil Mozhi kaiyalumai, (Vol-I), Ariviyal Tamizh kazhagam, Tanjavure.
13. Thirumalai, M.S., The Language of Science (1979), Geetha Book Publishers, Mysore.
14. Widdowson, H.G, Explorations in Applied Linguistics, Oxford University, Press.

# தொல்காப்பியச் சொற்பொருண்மைக்கோட்பாடுகளும், கலைச்சொல்லாக்க நெறிகளும்

*நா. ஜானகிராமன்*
உதவிப்பேராசிரியர் & துறைத்தலைவர், தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நவலர்குட்டப்பட்டு, ஸ்ரீரங்கம்

*பெ. தனலெட்சுமி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம்

***ஆய்வுச்சுருக்கம்:*** *தமிழ்மொழியில் பல்வேறு வகையிலான முன்னேற்றங்கள் நடந்துவருகின்றன. அவ்வகையில் சொல்வளர்ச்சி வரலாறு முக்கியம் வாய்ந்ததாகும். தொல்காப்பியம் என்பது தமிழின் முதல் இலக்கிய இலக்கண நூலாகும். பல்வேறு அறிவியல் துறைகளில் வளர்ந்து வந்துள்ள அறிவியல் மற்றும் பிறதுறைகளின் கலைச்சொற்களின் வளர்ச்சியைத் தொல்காப்பியத்தின் வழிநின்று உற்றுநோக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும். மொழி அறிஞர்கள் பல்வேறுவிதமான கோட்பாடுகளையும் கொள்கைகளையும் பயன்படுத்தி சொல்லுருவாக்கம் செய்துவருகின்றனர். ஒவ்வொருவரும் அவரவர்கள் சார்ந்துள்ள துறைசார்ந்து சொற்களைப் படைத்து வருகின்றனர். சிலர், கலைச்சொற்களைத் தாமாகவே உருவாக்கி இதழ்களில் வெளியிட்டு வருகின்றனர். மக்களிடம் சென்று சேர்கையில் சில சொற்கள் நிலைபெற்றுவிடுகின்றன. சில சொற்கள் வீழ்ந்து மடிகின்றன. பல சொற்கள் விவாதத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. இவ்வாறு பல நிலைகளைக் கடந்து கலைச்சொற்கள் உருவாக்கம் பெற்று மக்கள் பயன்பாட்டுக்கு வருகின்றன. எவ்வாறாயினும் சொற்களின் வளர்ச்சிக்கும் உருவாக்கத்திற்கும் கையாளக்கூடிய வழிமுறைகள் தொல்காப்பியத்தை அடியொற்றியே நடைபெறுகின்றன. தொல்காப்பியரின் கொள்கைகளைப் பயன்படுத்திச் சொல்லுருவாக்கம் செய்து வருகின்றோம். தற்போதைய சொல்லுருவாக்கச் செல்நெறிகளுக்கும் தொல்காப்பியத்திற்கும் உள்ள நெருக்கத்தையும் ஒற்றுமை வேற்றுமையையும் இந்தக் கட்டுரை ஆராய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தொல்காப்பியம், கலைச்சொற்கள், மொழியியல், மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு, கருத்துப்பெயர்ப்பு, புதுச்சொல்லாக்கம், கலைச்சொல்லாக்கம், மொழிக்கொள்கை, மொழிக்கோட்பாடு, சிக்கனக்கொள்கை, தழுவல்*

## அறிமுகம்

தொல்காப்பியம் பழமையின் சின்னமாகவும் புதுமையின் வரவாகவும் உள்ள கருவூலமாகும். காலங்கள் மாறினும் மொழியின் தன்மையும் அதன் சிறப்பும் மெருகேற்றிக்கொண்டே வரும் தன்மையதாகும். மொழிப்பயன்பாட்டில் சொல்லும், சொற்பொருண்மையும் அறிஞர்களாலும், புலவர்களாலும் வெவ்வேறு கோணங்களில் கையாளப்பெற்று வருகின்றன. காரணம், மொழியின் தேவை காலம்தோறும் தேவைப்படுகின்றது. பழையன கழிதலும் புதியன புகுதலும் மொழியில் இயல்பானவையாகும். ஆனால் பழமையைவிட்டு புதுமையைத் தொடர முடியாது. அதற்குக் காரணம் தொல்காப்பிய விதிகளையே சுட்டலாம். மொழியின் அடிப்படைத்தன்மையும் அதன் கூறுகளும் வளர்ந்து மோலோங்கி நிற்பதற்குக் காரணம் பலவித ஆளுமைத்தன்மையும்

அதன் பயன்பாட்டு உத்திமறைகளுமே ஆகும். சொல்லும் பொருளும் காலம்தோறும் மாறுபடும் தன்மை கொண்டதாக இருப்பினும் ஒரு பழஞ்சொல் புதுச் சொல்லுக்கு வித்திடும் போக்கு கலைச் சொல்லாக்கத்தில் காணப்பெறுகின்றது.

## ஆய்வு முன்னோடிகள்

கலைச்சொல்லாக்கம் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் 19 ஆம் நூற்றாண்டு களிலேயே வெளிவந்துள்ளன. சேடன்பாசு ராசகோபலாச்சாரியார் 1909 ஆம் ஆண்டில் அலோபதி மருத்துவம் தொடர்பான (A Compendium of English Medical Science) என்னும் நூலினை வெளியிட்டார். சேலம் நகரத்தில் விஞ்ஞானச் சொல் சங்கம் என்னும் அமைப்பினை ஏற்படுத்தினார். இதுவே முதல் அறிவியல் சங்கம் ஆகும்.

1932 இல் சென்னை மாநிலக் கல்வி இயக்கம் கலைச்சொல்லினை ஆக்குவதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது. சங்கங்களும், இயக்கமும் மட்டுமன்றி இதழ்களும், கருத்தரங்குகளும் அறிவியல் கலைச்சொற்களுக்கு வித்தாய் அமைந்தன.

1926 ஆம் ஆண்டு "Justice' பத்திரிகையில் பல்வேறு அறிவியல் கட்டுரைகள் வெளிவந்தன. இதில் பா.வே. மாணிக்க நாயக்கர் பல்வேறு கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

1927 ஆம் ஆண்டு மே மாத இதழில் இயற்கை விஞ்ஞானக் கலைச்சொற்களும் இடம் பெற்றன. 1972 ஆம் ஆண்டு பெங்களூரில் நடந்த கருத்தரங்கில் "இந்திய மொழிகளில் அறிவியல்" என்னும் கட்டுரை கலைச்சொல்லாக்கத்தினையும், மொழி பெயர்ப்பினையும், அறிவியல் சொற்களில் வாக்கிய அமைப்பினைப் பற்றியும் பேசு வனவாய் இருந்தது. பலருடைய சொற் பொழிவுகளும் கலைச்சொல்லாக்கத்திற்கு ஆக்கம் தருவனவாய் அமைந்திருந்தன. அவ்வகையில் முதற்சொற்பொழிவு 04.03. 1984-ல் "வாழையடி வாழை என்னும் தலைப்பில் டாக்டர் ஞா. இராஜேஸ்வரி அவர்கள் சொற்பொழிவாற்றினார். இது மரபியல் என்ற பொருளில் அமைந்திருந்தது.

1985 ஆம் ஆண்டு டாக்டர் இராதா செல்லப்பன் எழுதிய கலைச்சொல்லாக்கம், 2006 இல் எழுதிய கலைச்சொல்லியல் என்ற நூலும், இராம சுந்தரம் எழுதிய சொல் புதிது வளம் புதிது என்னும் கட்டுரையும் குறிப்பிடத்தக்க முன்னாய்வுகளாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்

இந்த ஆய்வு வரலாற்றியல் வழியிலான சொல்லாய்வு அணுகுமுறையினைக் கொண்டது. தொல்காப்பியச் சொல்லாளுமைகள், நவீனகாலச் சொல்லுருவாக்க அறிஞர்களின் புதிய அணுகுமுறைகளை மையமிட்டதாகும். காலந்தோறும் சொற்களின் வளர்ச்சி வீழ்ச்சியை மனதில்கொண்டு தொல்காப்பியரின் சிந்தனைகளை அடியொற்றி விவாதிக்கப்படுகின்றன. இலக்கணவியல் சொல்லாக்கங்கள் மற்றும் எழுத்துருவாக்கங்கள் புதிய தலைமுறையினருக்கான தடமாகவும் ஆதாரமாகவும் அமையும் என்ற நோக்கில் மரபிலக்கண வழியில் நின்று புதுமை படைத்தளிக்கும் ஆய்வு அணுகுமுறையாக இது உள்ளது. அறிவியல் சொற்கள் சிலவற்றை மையமிட்டு இந்த ஆய்வு அமைகின்றது.

## ஆய்வின் பயன்பாடு

வெறும் மொழிபெயர்ப்பு மட்டும் கலைச் சொல்லாகிவிட முடியாது. தழுவல் சொற்களும், ஒலிபெயர்ப்புச் சொற்களும், கடன்வாங்கல் முறையிலான சொற்களும் தமிழுக்கான கலைச்சொல் தளத்தை முழுமையையடையச் செய்துவிடாது. மாறாக, தமிழ்மொழி வளத்திற்கேற்ப புதுச்சொல்லை நாளும் உருவாக்கிட வேண்டும். அவ்வாறு உருவாக்கும் சொல் பயன்படுத்தலுக்கு எளிதானமுறையில் அமைதல் வேண்டும். படித்த மற்றும் ஓரளவு

படித்த மக்களுக்கும் அது சென்றடைய வேண்டும். கலைச்சொற்கள் படைப்பதற்கும் அது பரவலடைவதற்கும் தொல்காப்பியர் வழியிலான சிந்தனைகள் பயனுள்ளதாய் அமையும்.

### ஆய்வுத்தரவுகள் பகுப்பாய்வு
### பொருண்மையும் கலைச்சொல்லும்

முன்பொரு காலத்தில் கழகம் என்ற சொல் கள் அருந்தும் இடமாய் இருந்து இப்பொழுது கல்வி கற்கும் இடத்தை (University) குறிக்கின்றதற்குக் காரணம் சொற்பொருள் மாறுபாடும் (Semantic changes) அதன் பயன்பாட்டு பொருள் (applied objects) மாறுபாடுமே ஆகும். தொல்காப்பியர் பல இடங்களில் விதியைச் சொல்லி விதிவிலக்கையும் (law flexible) கூறுகின்றார். அவர் சொன்னது மட்டுமன்றி பிற இலக்கண விதிகளும் வரலாம் அதனையும் பெருந்தன்மையோடு மக்கள் ஏற்றுக்கொள்ளல்தான் சிறந்தது என்று வழிவிடுகின்றார். அவர் விட்ட வழிதான் புதுச் சொல்லாக்கம் என்னும் கலைச்சொல்லாக்கம் ஆகும்.

### கலைச்சொல்லாக்கம்

“அறிவியல் தமிழினைக் குன்றக் கூறாமலும் அதே சமயம் மிகைபடக் கூறாமலும் தெளிவாகத் திறம்படக் கூறும் கருவியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்’ (இராதா செல்லப்பன்: 1985: 23) 1 என்பது போன்ற பல விளக்கங்கள் இருந்தாலும் ஒரு துறைக்கு ஏற்ற புதிய சொல்லினை உருவாக்கி அதனைப் பயன்படுத்துவது என்னும் பொருளையே உள்ளடக்கும். எனவே இதனை துறைச்சொல் அல்லது கலைச்சொல் என்று வழங்குகின்றனர். துறைச்சொல்லும் கலைச்சொல்லும் ஒன்றுதான். கலை என்பதற்குப் பல துறைகள் உள்ளதால் பின்னாளில் துறைச்சொல் மறைந்து கலைச்சொல்லானது. பேராசிரியர் யுஜின் ஊஸ்டர் இந்த கலைச்சொல்லாக்கத்தைப் பற்றி நிறைய கருத்துகள் வழங்கியுள்ளார். ஆஸ்டிரியாவில் வளர்ந்த இந்தத் துறை பல்வேறு நாடுகளில் வளர்ந்து இன்று தமிழில் பல துறைச் சொற்களை உருவாக்கியுள்ளது. அறிவியல் துறையில் பயன்படுத்தும் ஒரு சொல், வணிகவியல் துறைக்கு அறியப்படுவது இல்லை. சட்டத்துறையில் பயன்படுத்தும் ஒரு சொல் மருத்துவத் துறைக்குத் தெரிவதில்லை. துறைதோறும் பல சொற்கள் பயன்பாட்டில் இருப்பதால் இதனைத் துறைச்சொல் என வழங்கிவிட்டனர். இதனைச் சொற்பொருள் என்னும் பிரிவில் மொழியியலார் அடக்கிவிடுகின்றனர். மொழியின் பல பரிமாணங்கள் கலைச் சொல்லாக்கத்தில் தெரியும். பல விளக்கங்கள் கலைச்சொல்லால் சாத்தியப்படும். இதற்கு இன்று வழங்கிவரும் பல கலைச்சொற்களை உதாரணம் காட்டலாம். கலைச்சொல்லாக்கம் பல நிலைகளில் நடைபெறுகின்றது. 1. மொழிபெயர்ப்பு (Translation) 2. ஒலிபெயர்ப்பு (Transliteration) 3. தழுவல் பெயர்ப்பு (adaptation) 4. கடன் மொழிபெயர்ப்பு (loan Transaltion) 5. புதுச்சொல்லாக்கம் (New terms) என்னும் ஐந்து நிலைகளில் நிகழ்கின்றது. மேலும் பல வகைகளில் இதனைப் பாகுபடுத்தலாம்.

### தொல்காப்பியமும், ஆக்கசொல்லும் (Derivate nouns)

தொல்காப்பியர் ஆக்கச்சொல்லைப் பற்றிப் பேசுகின்றார். பெயர், வினை, இடை, உரி எனும் நான்குவகைச் சொற்களோடு ஆக்கச்சொல் என்ற வகைப்பாட்டினைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். இவர் சொன்ன ஆக்கச்சொல் என்பது இன்றைய மொழியியலாரின் கலைசொல்லாக்கக் கோட்பாடு என்றே கொள்ளலாம். கிளவியாக்கம் என்ற சொல்லும் அது உணர்த்துகின்ற பொருண்மையும் புதியதொரு சொல்லை வழுவில்லாமல் உருவாக்கிப் பயன்படுத்துவது என்னும் பொருளில் வருகின்றது. வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையாற் இது கிளவியாக்கம்

என்னும் பெயர்த்தாயிற்று எனச் சேனாவரையர் உரை வகுக்கின்றார். எனவே கலைச்சொல்லாக்கத்தில் வழு இருக்கக் கூடாது. மேலும், பொருள்மயக்கம் இருக்கக் கூடாது. மயங்கற்பொருளில் கலைச்சொல் வருதல் இல்லை.

பெயரில் தோன்றும் கலைச்சொல்லும் வினையில் தோன்றும் கலைச்சொல்லும், பண்பில் தோன்றும் கலைச்சொல்லும் மொழியில் உண்டு. இருபொருள் பண்பு, பலபொருள் பண்பு என அறிவியற் சொற்களில் காணலாம் (இராதா செல்லப்பன் 2006:48) பெயரினை தொல்காப்பியர் நிலம், குடி, குழு, தொழில், பண்பு, உறவு, எண், திணை எனப் பலவாறு பாகுபடுத்தியுள்ளார். இந்தப் பாகுபாட்டு முறை கலைச் சொற்பாகுபாட்டு முறையினை ஒத்ததாகும். பட்டிபுத்திரர், கருவாளன், அவையத்தான், அத்திகோசத்தான் போன்ற பெயர்கள் இத்தகைய கோட்பாட்டில் உருவாக்கப்பெற்ற சொற்களாகும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் போன்றனவும் கலைச்சொல்லாக்கக் கோட்பாடுகளளாகும். உருவப்பஃறேற் இளஞ்சேட்சென்னி, திருப்பரங்குன்றம், பாம்பாறு, போன்றன பொருள் அடிப்படையினதாகும். மலைநாடன், ஊர், துறைவன் போன்றன இடம் சார்ந்தன. தையான், மாசியான் போன்றவை காலம் பற்றியவை. பெருந்தலைச்சாத்தன், செங்கால் நாரை போன்றன சினையின் அடிப்படையில் பிறந்தவை. உருவாக்கப்படும் கலைச்சொல் வரிசை முறையில் இருத்தலைத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். அடை, சினை, முதல் என்ற முறை மூன்றும் மயங்காமல் வருதல் சிறப்பு என வரையறுக்கின்றார் தொல்காப்பியர்.

## உருவப்பண்பு, தொழிற்பண்பு

உருவப்பண்பு காரணமாகப் பல பெயர்கள் உருவாக்கப்பெற்றுள்ளன. இதில் அருவப்பண்பு, உருவப்பண்பு என இரண்டு வகைகள் உள்ளன. நல்லன், தீயவன், நெடியோன், வள்ளியன் போன்றவை அருவப்பண்பினை வெளிப்படுத்துகின்றன. ஆசிரியர், மருத்துவன், புலவன் போன்றவை சிறப்புப் பட்டப்பெயர்களாகும். ஆசிரியர் பேரூர்கண்ணன் சாத்தன், கணக்காயர் தத்தனார், ஓதலாந்தையார் போன்றன தொழில் சார்ந்த கலைச்சொற்களாகும். (ஜானகிராமன் நா. 2003 : 56)

compass- திசைகாட்டி
buffer- சுமைதாங்கி
fuse - உருகி
catalyst- செயல் ஊக்கி

இவ்வாறு பல கலைச்சொற்கள் தொழில் மற்றும் பண்பு சார்ந்து உருவாக்கப்பெற்றுள்ளன. காலப் போக்கில் பெயர்ப்பொருண்மை மாற்றம் பெற்று வந்தது.

முற்காலத்தில் பிள்ளை என்ற சொல் அணிற்பிள்ளை, கீரிப்பிள்ளை, தென்னம்பிள்ளை என்ற அஃறிணையில் வழங்கிவந்துள்ளனர். இன்று குழந்தையினைப் பிள்ளை என்ற வழங்கி வருகின்றோம். இவ்வாறு பெயர்ப் பொருண்மை மாற்றம் பெற்று வந்தது மொழியியல் வரலாற்றுண்மை.

## தொல்காப்பியமும் கலைச்சொல்லாக்க அடிப்படைகளும்

தொல்காப்பியரின் சொல்லாளுமைத் திறத்தில் பல கலைச்சொற்கள் வரக்காணலாம். எழுத்ததிகாரத்தில் தொடங்கி சொல்லதிகாரத்தில் தொடர்ந்து பொருளதிகாரம் மரபியல் வரை கலைச்சொல்லாளுமையும் சொல்லாக்கமும் வருகின்றன. தொல்காப்பியர் கலைச்சொல் என்று சொல்லவில்லை. இருப்பினும் ஆக்கச்சொல் என்ற ஒரு சொல்லைக் கையாளுகின்றார். ஆக்கச் சொல்லை சொல்லும்போது காரணச் சொல்லை முதலில் வைத்துச் சொல்ல வேண்டும் எனவும், சில இடங்களில் காரணம் இல்லாமலும் பயன்படுத்தலாம் எனவும் கூறுகின்றார். கலைச்சொல்லாக்கத்திற்கும் இது பொருந்தும். சில இடங்களில் காரணச்

சொல்லைப் பயன்படுத்தாத கலைச் சொற்களையும் காண இயலுகிறது.

**ஆக்கம் தானே காரணம் முதற்றே.**
**ஆக்கக்கிளவி காரணம் இன்றியும்**
**போக்கு இன்று என்ப வழக்கினுள்ளே**
***(கிளவியாக்கம்-22)***

எனக் கூறுகின்றார் தொல்காப்பியர்.

**கலைச்சொல்லாக்கப்பொருண்மைகள்**

கலைச்சொல்லாக்கப் பொருண்மைகள் பல நிலைகளில் உருவாகும். உருவம், பண்பு, செயல்பாடு, வடிவம், நிலை எனவாறு அமைந்து சுருக்கமாகவோ அல்லது விளக்கமாவோ, ஒலிக்குறிப்பிலோ அமையும் தன்மையதாகும். இதனையும் தொல்காப்பியர், பொருண்மை சுட்டல் எனவும், வினைநிலையுரைத்தல் எனவும், பண்புகொளவருதல் எனவும் பெயர்ப்பயனிலையாகக் கொண்டு விளக்கியுள்ளார். வியங்கொள வருதல் கலைச்சொல்லில் இல்லை. வினாவிற்கேற்றலும் புதுச்சொல்லாக்கத்தில் கிடையாது. இதனைப் பின்வரும் நூற்பா மெய்ப்பிக்கின்றது.

பொருண்மை சுட்டல் வியங்கொளவருதல் வினைநிலைஉரைத்தல் வினாவிற்கு ஏற்றல் பண்பு கொள வருதல் பெயர் கொள வருதல் என்று அன்றி அனைத்தும் பெயர்ப்பயனிலையே. (வேற்றுமையியல்-5)

பெயரின் ஆகிய தொகையுமார் உளவே அவ்வும் உரிய அப்பாலான (வேற்றுமையியல்-6) எனக் கூறுகின்றார். கலைச்சொற்களின் மற்றொரு பண்பு தொகைச்சொல். இந்த தொகைச்சொல்லைக் கலைச்சொற்களில் காணலாம்

(உம்.)

Formatter - படிவமாக்கி
Microwave - நுண்ணலை
Package -பொதி

இத்தகைய சொற்களை விரிவுபடுத்தி எழுதும்போது சற்று நீளலாம். ஆனால் கலைச்சொற்களின் கொள்கையில் சொற்சுருக்கம் அல்லது சிக்கனக்கொள்கை என்னும் மொழியியலார் விதிப்படி தொகைச் சொற்களாக எழுதுவது மரபாகிவிட்டது. (ஞானகிராமன்.நா.2005:75) தொல்காப்பியர் இதனை “தொகையுமார் உளவே' என்று குறிப்பிடுகின்றார்.

**சொல்லும், பொருளும்**

உலகில் உள்ள அனைத்துச் சொற்களும் பொருள் தாங்கியே நிற்கின்றன என்கிறது தொல்காப்பியம். அதனுள் பலதுறைகளுக்காகக் கலைச்சொற்களுக்கான பொருண்மைக்கூறுகளும் பொதிந்துள்ளன. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றார் தொல்காப்பியர். “மொழியின் அனைத்து அம்சங்களும் அவை தாங்கியுள்ள பொருண்மையிலும், கருத்து ருவாக்கத்திலும் அமைகின்றன. என்கிறார் புளூம்பீல்டு (Bloomfield 1986: pp. 77-78) அவற்றுள் சொன்மை தெரிதல் ஒருபுறமிருக்க பொருண்மை தெரிதலே மிகையாகும். இதனைப் பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லின் ஆகும் என்மனார் புலவர் என்கிறார். (பெயரியல்-2) மேலும், தெரிபு வேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும் இருபாற்று என்ப பொருண்மை நிலையே. (வேற்று.20) எனக் கூறியுள்ளார். தெளிவான முறையில் கலைச்சொல்லை விளக்குதல் வேண்டும். அல்லது உருவாக்கல் வேண்டும். இருந்தாலும் இரண்டு நிலையிலும் கலைச்சொல் உருவாக்கப்படலாம். முக்காலத்திற்கும் பொதுவான வினைச்சொல்லும் எக்காலத்திலும் பயன்படுத்தப்பெறும் பெயர்ச்சொல்லும் கலைச்சொல்லியலாரால் உருவாக்கப்படுகின்றன (Wid dowson H.G 1980: pp.34-35) சிலபோது சிற்சில மாற்றங்களும் தரப்பெறுகின்றன. இது இரண்டு நிலைகளில் தோற்றுவிக்கப்பெறும் என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அது பெயர்ச்சொல், மற்றொன்று வினைச்சொல் இதனை, சொல் எனப்படுப பெயரேவினை என்று ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே

என்கிறார். நவீனக் காலத்தமிழில் பல்வேறு புதுச்சொல்லாக்கங்கள் வேண்டியோ வேண்டாமலோ, புரிந்தோ புரியாமலோ நடைமுறை வாழ்க்கையிலும் எழுத்திலக்கண மரபிலும் படைக்கப்பட்டு வருகின்றன (Shanmugam S.V *1975: 90)* என்னும் கருத்து நோக்கற்பாலதாகும்.

### கலைச்சொல்லும் காரணமும்

கலைச்சொற்கள் காரணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பெறுகின்றன. இயற்பெயரில் உருவாகுபவை கலைச் சொற்கள் அல்ல என்றாலும் அதனை அடியாக வைத்து உருவாக்கப்பெறும் பெயர்களைக் கலைச்சொற்கள் எனலாம். தொல்காப்பியர் நிலம், நீர், மண் ஆகாயம் போன்றவற்றை இயல்பு எனும் வகையினில் அடக்கிவிடுகின்றார். கிளை, வகையில் உருவாகும் பல பெயர்களும் உள்ளன. கலைச்சொற்கள் பல காரண மற்றும் அமைப்பு, அதன் செயல்பாட்டு அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறு உருவாக்கப்பட்டாலும் அவை, அது சார்ந்த மொழிப்பின்புலத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். (Thirumalai M.S. *1979: 124)*

**இயற்பெயர்சினைப்பெயர்சினைமுதற்பெயரே**
**முறைப்பெயர்க் கிளவி தாமே தானே**
**எல்லாம் நீயிர் நீ எனக்கிளந்து**
**சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு**
**அன்னவைதோன்றின்அவற்றொடும்கொளலே**
**(பெயரியல்-20)**

என்கிறார் தொல்காப்பியர். சினைமுதற்பெயரே தொல்காப்பியரின் எழுத்து மற்றும் சொற்கோட்பாடுகள் அவ்வக்கால மக்களின் பயன்பாட்டு அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தி வந்தமையாகும். இச்சொற்கள் இலக்கண நெறிகளை வைத்துக்கொண்டோ அல்லது இலக்கிய நெறிகளுக்கு கட்டுப்பட்டோ அமைவதாகக் கொள்ள இயலாது என்னும் கருத்துசிந்திக்கத்தக்கது என்பார் இராம.சுந்தரம். *(சுந்தரம் இராம.2005:65)*

### உரிச்சொற்களும் கலைச்சொற்களும்

உரிச்சொற்கள் எனும் இயலுள் தொல்காப்பியர் கலைச்சொல்லாக்கச் சொற்பொருண்மைகளைப் பேசுகின்றார். இதன் முடிவில் எச்சொல்லாயினும் வேறு பொருள்கிளத்தல் எனும் தொடருக்குக் கலைச்சொல்லுக்குரிய விளக்கம் அளித்துள்ளார். வேறுபொருள் கிளத்தல் என்பது நுட்பப் பொருளைக் குறித்தல் என்னும் வகைமையில் அடங்கும். நுட்பமானது ஏதேனும் ஒரு கருத்தை மையமிட்டு உருவாக்கப்படும் சொற்கூறுகள் எனலாம். *(சண்முகம். செ.வை 1990: 145)*

**உரிச்சொற் கிளவிவிரிக்கும் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி**
**பெயரினும் வினையினும் மெய்தடுமாறி**
**ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி**
**தம் தம்மரபின் சென்று நிலைமருங்கின்**
**எச்சொல் ஆயினும் பொருள் வேறுகிளத்தல்**
**(உரியியல்-1)**

இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றில் நிலைத்துப் பெயர், வினை என்பதில் கலந்து ஒரு சொல் பல பொருளாகவும், பலசொல் ஒரு பொருளாகவும், இதுவரை வழக்கில் பயின்று வராதவற்றை வந்ததாகக் கொண்டு வரும் சொல் நேராக இன்றி வேறுவிதமாகப் பொருள் கிளக்கும் தன்மையில் உரிச்சொல் பிறக்கும் என்று தொல்காப்பியர் பொருண்மை கற்பிக்கின்றார். தொல்காப்பியரின் உரிச்சொல் விளக்கம் கலைச்சொல் பொருண்மைக்கும் அது தாங்கியுள்ள இடைப்பாலமாக விளங்குகின்றது *(சண்முகம். செ. வை 1990: 178)*

பயப்பே பயன்ஆம். *(உரி.9 )*
பசப்புநிறன் ஆகும். *(உரி.10 )*
இயைபே புணர்ச்சி. *(உரி.11)*
இசைப்பு இசைஆகும்

போன்ற சொற்கள் இதற்கு உதாரணங்களாகும்.

**திரிசொற்பொருண்மை**

தொல்காப்பியம் அலகு என்ற கலைச்சொல் பல்வேறு துறைகளுக்குப் பயன்படுகின்றது. கணிதவியல், இயற்பியல், நிர்வாகவியல் எனப்பலவற்றை இதற்கு உதாரணம் சொல்லலாம்.

ஒரு பொருள் குறித்த வேறு சொல் ஆகியும் வேறு பொருள் குறித்த ஒருசொல் ஆகியும் இருபாற்று என்ப திரிசொல்கிளவி என்பார் தொல்காப்பியர்.

தொல்காப்பியரின் இலக்கணப் புலமையும், இலக்கியவன்மையும்பல இலக்கணநூல்களிலிருந்து இன்றும் தமிழுக்கு முத்தாய்ப்பாய் விளங்குகின்றன என்கிறார் இளங்குமரனார். 2016 : 99) சொற்கள் திரிந்து வேறுபொருள் தருகின்றதன்மையை உரிச்சொல் என்று இலக்கணம் விளக்குகிறது. மாறாக, ஒரு துறைக்காரர் பயன்படுத்தும் சொல்லை துறைச்சொல் என வழங்குகின்றனர் கலைச்சொல்லியலாளர்கள். மொழிகளின் பல்வேறு உரையாடல்களில் சில சொற்கள் முதன்மை பெறகின்றன. இதனைச்சொல்லாளுமை என்கின்றனர் மொழியியலாளர்கள். மொழியியலில் ஒரு குறிப்பிடத்தக்க சொல்லாட்சி என்றும் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது. அந்த தனித்தன்மையைத் தருவது அம்மொழியில் உருவாகிய துறைச்சொற்கள்தான் என்றால் மிகையாகாது. (அகத்தியலிங்கம். ச. 1990: 345)

**வடசொல் பயன்பாடு**

வடசொல்லை எக்காலத்தும் தவிர்க்க முடிவதில்லை. ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், கார்பன்-டை-ஆக்ஸைடு போன்ற சொற்களும் பௌதிகசாஸ்திரம், இராசயனநூல் போன்ற சொற்கள் வடசொல் பயன்பாட்டுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இலங்கையில் உருவாக்கப்படும் பல்வேறு சொற்கள் தனித்தமிழ்ச்சொற்களாகவும், “மக்களின் அன்றாடப் புழங்குசொற்களாகவும் அமைகின்றது. ஆனால், தமிழகத்தில் தமிழக மக்களால் உருவாக்கப்பெறும் சொற்கள் பலவற்றில் வடசொற்கள் மற்றும் ஆங்கிலச் சொற்களின் தாக்கம் இணைந்திருப்பது அவர்களின் மொழித்தாக்கத்தையே காட்டுகின்றன” (கருணாகரன் கி. 2000: 78)

**வடசொல்கிளவி வடஎழுத்து ஓரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே.**
**(எச்சவியல்-5)**

இதனையும் தொல்காப்பியர் பேசியுள்ளார்.

**மரபியலும் கலைச்சொற்களும்**

தொல்காப்பியர் மரபியலில் பல்வேறு கலைச்சொற்களை எடுத்தாண்டுள்ளார். ஆண்பால், பெண்பால்,இளமைப்பெயர், முதுமைப்பெயர் என்றினினையப் பாகுபாடுகள் தொல்காப்பியரின் சிந்தனையில் உதித்தவையாகும். குழந்தைகளின் பள்ளிப்பருவ பாடநூல்களை உருவாக்கும்போது அவற்றிலுள்ள கலைச்சொற்களின் கையாளும் தன்மையறிந்தும், எளிதில் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் சொற்களை ஆக்கித்தருதல் வேண்டும். அப்பொழுதுதான் அவை மாணவர்களின் மனதில் எளிதில் பதியும் (Radhamony.K 1995:30)

**மாற்ற அருஞ்சிறப்பின் மரபு இயல் கிளப்பின்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று**
**ஒன்பதும் குழவியொடு இளமைப்பெயரே.**
**(உரியியல்-4) 1**

**ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்**
**சேவும் சேவலும் இரலையும் கலையும்**
**மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்**
**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**
**யாத்த ஆண்பாற் பெயர் எனமொழிப.**
**(உரியியல்-10)**

**முடிவுரை**

கலைச்சொல்லாக்கம் என்னும் துறை தற்காலத்திற்கு வேண்டப்படும் துறையாகும். பிற துறைகளின் சொற்களை மொழிபெயர்த்து

எழுதிப் பயன்படுத்தி வருகின்றோம். மேலும், அறிவியல் துறைகளின் சொற்கள் இன்னும் பரவலடையாமல் அப்படியே விடப்படுகின்றன. தொல்காப்பியர், உருவாக்கிய சொல்லாக்கக் கோட்பாடுகள் கலைச்சொல் துறைக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. உருவம், அமைப்பு, செயல்பாடு என்னும் அடிப்படையினைக்கொண்டு பொருள்களுக்கு மற்றும் செயல்பாட்டிற்குப் பெயரிடுகின்றோம். அறிவியல், சட்டம், தொழில்நுட்பம் என்னும் துறைகளில் இம்முயற்சி நடந்து வருகின்றது. மரபிலக்கணக்கோட்பாடுகளை மையமிட்டும், புதிய மொழியியல் கோட்பாடுகளை அடியொற்றியும் கலைச்சொற்கள் மொழியில் உருவாக்கப்படுகின்றன. துறை அறிஞர்கள், மொழி அறிஞர்கள் ஆகியோருடன் இணைந்து இத்துறை பொலிவு பெறுகின்றது. முன்னொட்டு, பின்னொட்டு, கருத்துருவாக்கத் தன்மை ஆகியவை சொல்லாக்கத்தில் முதன்மை பெறுகின்றன. வடசொற்களைத் தவிர்த்து விட்டு வளமான சொற்களைத் தமிழில் ஆக்கிக்கொள்ளல் இன்றையகாலத் தமிழுக்கு தேவையான ஒன்றாகும். தழுவல் சொற்கள் சில இடங்களில் ஏற்றுக்கொள்ளப் பெறுகின்றன. மொழியில் சொல் சிக்கனக் கொள்கை பின்பற்றப்படுகின்றது. இக்கொள்கை சொற்களை ஏற்றுக்கொள்ளலுக்கு ஏதுவாகிறது. உலக நாடுகளில் அவரவர் தாய்மொழியில் சொற்களை உருவாக்குகின்ற முயற்சி நடைபெறுகின்றது. தமிழுக்கு உருவாக்கும் முயற்சியில் தொல்காப்பியக் கோட்பாடுகளும் புத்திலக்கண அறிஞர்களின் கொள்கைகளும் உறுதுணை புரிகின்றன.

### மேற்கோள் நூல்கள்

1. அகஸ்தியலிங்கம் எஸ், திராவிட மொழிகள், (1990), அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.
2. ப்ளூம்ஃபீல்ட் (1993), மொழி, நியூயார்க்.
3. இளங்குமரன், ஆர், இலக்கண வரலாறு (2016), மணிவாசகர் பப்ளிகேஷன்ஸ், சிதம்பரம்.
4. ஜானகிராமன், என், அரிவியல் கலைச்சொல்லாக்கம் (2003), ராகவன் பப்ளிஷர்ஸ், கடலூர்.
5. ஜானகிராமன், என், அறிவியல் தமிழ் வரலாறு (2005), ராகவன் பப்ளிஷர்ஸ், கடலூர்.
6. கருணாகரன், கே, மொழியியல் (2000), பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
7. ராதா செல்லப்பன், கலைச்சொல்லியல் (2006), தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை.
8. ராதா செல்லப்பன், கலைச் சொல்லாக்கம் (1985), மங்கை, வாத் தியார் தோட்டம், சென்னை.
9. ராதாமணி, கே, (1995), வேதியியல் மொழி, டி.எல்.ஏ பப்ளிகேஷன்ஸ், திருவனந்தபுரம்.
10. சண்முகம், எஸ்.வி., சொல்லிலக்கணக் கோட்பாடு (1990), அண்ணாமலை நகர், சிதம்பரம்.
11. சண்முகம், எஸ்.வி., தமிழில் நவீனமயமாக்கல், (1975), இந்தியானா பல்கலைக்கழகம், ப்ளூமிங்டன்.
12. சுந்தரம், ஆர்.எம்., அறிவியல் கட்டுரைகளில் மொழிக் கையாளுமை, (தொகுதி -1), அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.
13. திருமலை, எம்.எஸ்., அறிவியல் மொழி (1979), கீதா புத்தக வெளியீட் டாளர்கள், மைசூர்.
14. விடோவ்ஸன், எச்.ஜி, பயன்பாட்டு மொழியியலில் ஆய்வுகள், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், பதிப்பகம்.